Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Questions:

ஐந்து மதிப்பெண் வினாக்கள் ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி

1.இளவுயிரி நிலை எவ்வாறு இனப்பெருக்க நிலையிலிருந்து வேறுபட்டுள்ளது?

2.பலபிளவு முறை பற்றி விரிவாக விடையளி.

3.உயிரிகளில் காணப்படும் பல்வேறு வகையான ஒருங்கிணைவு முறைகளை விவரி.

4.கீழ்க்கண்டவற்றை வேறுபடுத்துக.
அ) வெளி கருவுறுதல் மற்றும் உட்கருவுறுதல்.
ஆ) பல்லி மற்றும் பிளேனேரியாவில் காணப்படும் இழப்பு மீட்டல்

5.இரு சமப்பிளவு என்றால் என்ன? அதன் வகைகளைப் பற்றி விவரி?

மூன்று மதிப்பெண் வினாக்கள் ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி கட்டாய வினா எண் 18

6.இரு பிளவுறுதல் முறைப்படி இனப்பெருக்கம் செய்யும் ஒரு செல் உயிரிகள் அழிவற்றவை. நியாயப்படுத்து.

7.பாலிலா இனப்பெருக்க முறையில் உருவாக்கப்படும் சேய்கள் ஏன் 'பிரதி' (clone) என்று அழைக்கப்படுகிறது?

8.காரணங்கள் கூறுக.
அ) தேனீக்கள் போன்ற உயிரிகள் கன்னி இனப்பெருக்க விலங்குகள் என்று அழைக்கப்படுகின்றன
ஆ) ஆண் தேனீக்களில் 16 குரோமோசோம்களும் பெண் தேனீக்களில் 32 குரோமோசோம்களும் காணப்படுகின்றன.

9.இருசமப்பிளவு என்றால் என்ன?

10.உயிரிகளில் காணப்படும் பல்வேறு வகையான ஒருங்கிணைவு முறைகள் யாவை?

11.வாழ்க்கைச் சுழற்சியின் வெவ்வேறு நிலைகள் பற்றிக் கூறு:-

இரண்டு மதிப்பெண் வினாக்கள் ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி

12.எவ்வுயிரினத்தில் செல் பிரிதலே இனப்பெருக்க முறையாகச் செயல்புரிகிறது?

13.பெண் இனச்செல் நேரடியாக வளர்ச்சியடைந்து சேயாக மாறும் நிகழ்வின் பெயரையும் அது நிகழும் ஒரு பறவையின் பெயரையும் குறிப்பிடுக.

14.கன்னி இனப்பெருக்கம் என்றால் என்ன? விலங்குகளிலிருந்து இரு எடுத்துக்காட்டுகள் தருக.

15.பாலிலா இனப்பெருக்கம் அல்லது பாலினப்பெருக்கம் இவற்றுள் எது மேம்பட்டது? ஏன்?

16.ஒருங்கிணைவு மற்றும் கருவுறுதல் ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாடுகள் யாவை?

17.இனப்பெருக்கம் என்றால் என்ன?

18.பாலினப் பெருக்கம் என்றால் என்ன?

19.கீழ்கண்டவற்றை வேறுபடுத்துக.

20.இளம் உயிரி கன்னி இனப்பெருக்கம் என்றால் என்ன?

ஒரு மதிப்பெண் வினாக்கள் அனைத்து வினாக்களுக்கும் விடையளி

21.எவ்வகைக் கன்னி இனப்பெருக்கத்தில் ஆண் உயிரிகள் மட்டுமே உருவாகின்றன?
(a) அர்ரீனோடோக்கி (b) தெலிடோக்கி (c) ஆம்ஃபிடோக்கி (d) 'அ' மற்றும் 'இ' இரண்டும்

22.பாக்டீரியாவில் பாலின இனப்பெருக்கம் கீழ்கண்ட எந்த முறையில் நடைபெறுகிறது _____.
(a) கேமிட் உருவாக்கம் (b) எண்டோஸ்போர் உருவாக்கம் (c) இணைதல் (d) சூஸ்போர் உருவாக்கம்

23.எவ்வகை இனப்பெருக்கத்தில் வேறுபாடுகள் தோன்றும் _____.
(a) பாலிலா இனப்பெருக்கம் (b) கன்னி இனப்பெருக்கம் (c) பாலினப் பெருக்கம் (d) 'அ' மற்றும் 'ஆ' இரண்டும்

24.கூற்று மற்றும் காரண வினாக்கள் :
கீழ்க்கண்ட வினாக்களில் இரண்டு கூற்றுகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒன்று கூற்று (கூ) ஆகும். மற்றொன்று காரணம் (கா).சரியான விடையை கீழ்க்காணும் வகையில் குறிப்பிடுக:
கூற்று: தேனீக்களின் சமூகத்தில் ஆண் தேனீக்களைத் தவிர மற்ற அனைத்தும் இருமயம் கொண்டவை
காரணம் : ஆண் தேனீக்கள் கன்னி இனப்பெருக்கம் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன.
(a) 'கூ' மற்றும் 'கா' இரண்டும் சரியானால் 'கா' என்பது 'கூ' வின் சரியான விளக்கம் ஆகும்.
(b) 'கூ' மற்றும் 'கா' இரண்டும் சரியானவை ஆனால் 'கா' என்பது 'கூ' வின் சரியான விளக்கம் இல்லை. (c) 'கூ' சரியானது ஆனால் 'கா' தவறானது.
(d) 'கூ' மற்றும் 'கா' இரண்டும் தவறானவை.

25.கூற்று மற்றும் காரண வினாக்கள் :
கீழ்க்கண்ட வினாக்களில் இரண்டு கூற்றுகள் கொடுக்கப்பட்டுள்ளன. ஒன்று கூற்று (கூ) ஆகும். மற்றொன்று காரணம் (கா).சரியான விடையை கீழ்க்காணும் வகையில் குறிப்பிடுக.
கூற்று: பாலிலா இனப்பெருக்கம் மூலம் உருவாகும் சேய்கள் பெற்றோரை ஒத்த மரபியல் பண்புகளைக் கொண்டிருத்தல்.
காரணம்: பாலிலா இனப்பெருக்கத்தில் மறைமுகப் பிரிவு மட்டுமே நடைபெறுகிறது.
(a) 'கூ' மற்றும் 'கா' இரண்டும் சரியானால் 'கா' என்பது 'கூ' வின் சரியான விளக்கம் ஆகும்.
(b) 'கூ' மற்றும் 'கா' இரண்டும் சரியானவை ஆனால் 'கா' என்பது 'கூ' வின் சரியான விளக்கம் இல்லை. (c) 'கூ' சரியானது ஆனால் 'கா' தவறானது.
(d) 'கூ' மற்றும் 'கா' இரண்டும் தவறானவை.